# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1808 - 2013 අප්‍රේල් මස 26 වැනි වැනි සිකුරාදා - 2013.04.26

*1808 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) – மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1078 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


**கவனிக்க.**- (i) சுங்கம் (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) முஸ்லிம் திருமண மணநீக்கம் (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, மே மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, மே மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமேல் மாகாண மாகாண சபை**

வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கொண்ட சமூகநல அமைப்பை (நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதாரத்தை) ஒழுங்குபடுத்துவதற்கான நியதிச்சட்டம்

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் வடமேல் மாகாண மாகாண சபையினால் 2013.03.19 ஆந் திகதி நிறைவேற்றப்பட்டு 2013.04.02 ஆந் திகதி வடமேல் மாகாண ஆளுநரால் அனுமதியளிக்கப்பட்ட மேற்படி கொள்கைப் பிரகடனத்தை அனைவரும் அறிந்து கொள்வதற்காக இங்கு கீழே பிரசுரிக்கின்றேன்.

பீ. பீ. எம். சிரிசேன,
செயலாளர்,
வடமேல் மாகாண மாகாணசபை.

வடமேல் மாகாண மாகாண சபை அலுவலகம்,
குருநாகல்,
2013.04.04.

**வடமேல் மாகாண மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கொண்ட சமூகநல அமைப்பை (நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதாரத்தை) ஒழுங்குபடுத்துவதற்கான நியதிச்சட்டம்**

பூர்விகம்.

வடமேல் மாகாணத்தின் நிலையான நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச்சுகாதார செயற்றிட்டங்களை ஆரம்பித்தல், கொண்டு நடாத்தல், நிர்வகித்தல் போன்றவற்றிற்காக சமூகநல அமைப்புக்களை ஆரம்பித்தல், வழி நடாத்தல், ஒழுங்குபடுத்தல் போன்றவற்றிற்காக உள்ளூராட்சி அமைச்சின் கீழ் அலகொன்றை ஆரம்பித்தல், அதனுடன் தொடர்புபட்ட அல்லது இணைப்பு விடயங்களுக்காக விதிமுறைகளை விதிப்பதற்கான நியதிச்சட்டமாகும்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வடமேல் மாகாணத்தின் மாகாண சபையினால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.

குறுகிய பெயரும் செயற்படும் திகதியும்.

1. இக்கொள்கைப் பிரகடனம் 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க "வடமேல் மாகாணத்தின் சமூகநல அமைப்புக்களை ஆரம்பித்தல், ஒழுங்குபடுத்தலுக்கான கொள்கைப் பிரகடனம்" என அழைக்கப்படுவதுடன், வடமேல் மாகாணத்தின் ஆளுநரினால் அனுமதி அளிக்கப்பட்ட தினத்திலிருந்து இது செல்லுபடியாகும்.

நோக்கங்கள்.

2. (1) மாகாணத்தின் மக்களுக்கான நீர்வழங்கல், சுற்றாடற் பொது சுகாதார வசதிகள் என்பன தொடர்பாக உருவாக்கப்படும் சமூகநல அமைப்புகளின் நிலைத்த தன்மையை பாதுகாத்தல், வழிகாட்டல், நிர்வகித்தல்.

(2) பயன் பெறும் மக்களின் நீர் வழங்கல், சுற்றாடற் பொது சுகாதாரப் பரம்பல் தொடர்பான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

(3) மாகாணத்தினுள் நடைமுறைப்படுத்தப்படும், நீர் வழங்கல், சுற்றாடற் பொது சுகாதார செயற்திட்டங்களை பொது முகாமைத்துவக் கட்டமைப்பின் கீழ் கொண்டு வரல்.

(4) வடமேல் மாகாண நீர் வழங்கல், சுற்றாடற் பொது சுகாதார அலகை நிறுவுதல்.

## பகுதி I

**வடமேல் மாகாண நீர் வழங்கல், சுற்றாடற் பொது சுகாதார அலகை ஆரம்பித்தல், அதன் அமைப்பு, நிர்வாகம்**

மாகாண அலகை நிறுவுதல்.

3. இக்கொள்கைப் பிரகடனத்தைச் செயற்படுத்தும் பணிக்காகவும் அதன் கீழ் ஆரம்பிக்கப்படும் மாகாணக் கமிட்டியின் நோக்கம் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும் தேவையான, இங்கு இதன் பின்னர் "மாகாண அலகு" என அழைக்கப்படும் மாகாண நீர் மற்றும் சுற்றாடற் பொதுச் சுகாதார அலகு உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் அலுவலகத்தில் ஆரம்பிக்கப்படும்.

4. (1) மாகாண அலகின் பணிப்பாளராக குழு நிலை III ஆம் தரத்திற்கு குறையாத உத்தியோகத்தர் ஒருவர் அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் மாகாண ஆளுநரினால் நியமிக்கப்படவேண்டும். *மாகாண பணிப்பாளரும், ஊழியர் குழுவும்.*

(2) மாகாண அலகின் கடமையாற்றத் தேவையான ஊழியர் குழுவை வடமேல் மாகாணத்தில் அரச சேவையில் ஈடுபட்டுள்ள ஏதாவது பதவி வகிக்கும் ஒருவருக்கு கடமையை ஒப்படைத்தல் மூலம் பெற்றுக்கொள்ள மாகாண பிரதம செயலாளருக்கு கட்டளை ஒன்றின் மூலம் விதிமுறைகளை வகுக்கலாம்.

5. மாகாண அலகில் நிறைவேற்றப்படும் சகல கருமங்கள், பணிகள் தொடர்பிலான நிர்வாகம் மாகாணத்தின் உள்ளூராட்சிச் செயலாளருக்கு வழங்கப்படும். *மாகாண அலகின் நிர்வாகம்.*

6. மேலே 04 ஆம் சரத்தின் கீழ் தமது நிலையான பதவிக்கு மேலதிகமாக மாகாண அலகில் கடமை பொறுப்புச் சாட்டப்பட்ட அதிகாரி ஒருவருக்கு அவ்வாறு கடமை பொறுப்புச் சாட்டப்பட்டதன் பேரில் தனது நிலையான பதவிக்குரிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக ஊதியமோ கொடுப்பனவோ வழங்கப்படலாம். *மாகாண அலகின் சம்பளமும் கொடுப்பனவுகளும்.*

## பகுதி II

### சமூக நல அமைப்புகளின் பதிவும் மேற்பார்வையும்

7. (1) இக்கொள்கைப் பிரகடனம் அமுலாகும் தினத்தில் மாகாணத்தினுள் நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதாரத்திற்குரிய செயற்றிட்டங்களைச் செயற்படுத்தும், நிர்வகிக்கும் அல்லது அச்செயற்றிட்டத்தின் செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஏதாவதொரு செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள அனைத்து சமூக நல அமைப்புக்களும் இக்கொள்கைப் பிரகடனம் அமுலாக்கப்பட்டு 3 மாதங்களுக்குள் மாகாண அலகின பணிப்பாளருக்கு முறையான விண்ணப்பம் ஒன்றினை முன்வைத்து பதிவு செய்து கொள்ள வேண்டும். *சமூக நல அமைப்புகளின் பதிவு.*

(2) இக்கொள்கைப் பிரகடனம் செயற்படுத்தப்படும் தினத்தின் பின் திட்டமிட்டு ஆரம்பிக்கப்படும் நீர் வழங்கல், சுற்றாடல் பொதுச் சுகாதாரத்திற்குரிய யாதேனுமொரு செயற்திட்டம் தொடர்புடைய எந்தவொரு சமூக நல அமைப்பாயினும் அவ்வாறு தொடர்புட 14 நாட்களுக்கு முன் மாகாண அலகின் பணிப்பாளரிற்கு பதவியிற்காக விண்ணப்பம் ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) மேலே (1), (2) ஆம் உப சரத்துக்களுக்கமைய பதிவு செய்வதற்காக விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்று 30 நாட்களுக்குள் சமூக நல அமைப்பைப் பதிவு செய்வதற்கு அல்லது காரணங்காட்டி நிராகரிப்பதற்கு மாகாண அலகின் பணிப்பாளரினால் வகை செய்ய வேண்டும். அவ்வாறு விண்ணப்பம் நிராகரிக்கப்படுவது, மீண்டும் விண்ணப்பிப்பதற்கு தடையாக அமையாது.

8.(1) அவ்வாறு பதிவு செய்து கொண்டதன் பின் அவ்வனைத்து சமூக நல அமைப்புக்களும் நீர் வழங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மாகாண அலகிடமிருந்து வருடாந்த அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். *வருடாந்த அனுமதிப் பத்திரம்.*

(2) அதற்கான முறையான விண்ணப்பப் படிவத்தை மாகாண அலகின் பணிப்பாளரிடம் கையளிக்க வேண்டும். அத்துடன், விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்கும் வேளையில் அல்லது அதன் பின்னர் மாகாண அலகின் பணிப்பாளருக்குத் தேவையேற்படின் உரிய நீர் மூலத்திலிருந்து உயிரியல், இரசாயனத் தன்மை தொடர்பான பரிசோதனை அறிக்கை ஒன்று, சமூக நல அமைப்பின் வருடாந்த கணக்காய்வு அறிக்கை, தேவையான ஏனைய ஆவணங்களை முன்வைக்குமாறு பணிக்க முடியும்.

(3) இவவ்றக்கையையும் அதனோடு தொடர்புடைய ஏனைய விடயங்களையும் கருத்திற்கொண்டு மாகாண அலகின் பணிப்பாளரினால் வருடாந்த அனுமதிப்பத்திரத்தை வழங்கவோ மறுக்கவோ முடியும்.

(4) வருடாந்த அனுமதிப் பத்திரம் வழங்கப்படவில்லையாயின் உரிய அறிக்கையுடன் சரியான முறையில் விண்ணப்பப்படிவம் முன்வைக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு மாத காலத்தினுள் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்பட்டமை மாகாண அலகின் பணிப்பாளரினால் உரிய சமூக நல அமைப்பிற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட வேண்டும்.

(5) அவ்வாறு நிராகரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் தொடர்பில் நிராகரிக்கப்பட்ட தினத்திலிருந்து இரண்டு வார காலத்தினுள் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம். அவ்வாறான மேன்முறையீடு தொடர்பில் செயலாளருக்குப் பொருத்தமான தீர்மானம் எடுக்கலாம்.

(6) வருடாந்த அனுமதிப் பத்திரம் இன்றி நீர் வழங்கல் செயற்றிட்டங்களில் தம்மை ஈடுபத்திக்கொள்ளும் சமூக நல அமைப்புக்கள் இக்கொள்கைப் பிரகடனத்தின் II ஆவது சரத்தின் பிரகாரம் செயலாற்ற வேண்டும்.

சமூக நல அமைப்பு மேற்பார்வை.

9. மேலே 7 ஆவது சரத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சமூகநல அமைப்புக்களின் நடவடிக்கைகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை மேற்பார்வை செய்தல், ஆய்வு செய்தல், அறிவுரை வழங்குதல் தொடர்பான அதிகாரம் மாகாண அலகிற்கு அல்லது அலகின் வழிகாட்டல், அறிவுரைகளின் பிரகாரம் அச்சமூக நல அமைப்பு அமைந்துள்ள உள்ளூராட்சி மன்றத்திற்குரியது.

அமைச்சருக்குரிய அதிகாரங்கள்.

10.(1) மேலே 7 ஆவது சரத்தின் பிரகாரம் பதிவு செய்து கொண்ட சமூக நல அமைப்புக்களின் நடவடிக்கைகள், பணிகள் தொடர்பான வழிகாட்டல், அறிவுரை வழங்க மாகாண சபையில் உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சருக்கு அதிகாரமுண்டு.

(2) அவ்வாறு வழங்கப்படும் அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் உரிய சமூக நல அமைப்பு நடைமுறைப்படுத்தவில்லை என அல்லது மீறப்படுகின்றது என அலகின் பணிப்பாளரினால் அறிவிக்கப்படுமாயின், II ஆவது சரத்தின் பிரகாரம் செயலாற்றுவதற்கு அல்லது அவ்வாறு செய்யாததற்கு பரிந்துரைகளை வழங்குவதற்கு ஆய்வு உத்தியோகத்தர் ஒருவர் அல்லது ஆய்வுக் குழு ஒன்றை நியமிப்பதற்கு விடயப் பொறுப்பு அமைச்சருக்கு அதிகாரம் உள்ளது. அவ்வாய்வுக் குழுவானது செயலாளரினால் பரிந்துரைக்கப்படும் விடயங்களை ஆய்வு செய்வதற்குத் தேவையான விஷேட அறிவுடன் கூடியதாக இருக்க வேண்டும்.

(3) இக்கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அமைச்சருக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் கட்டளைகளைப் பிறப்பிக்க முடியும்.

(4) மாகாணக் குழுவினதும் பிரதேசக் குழுவினதும் நடவடிக்கைகள் தொடர்பில் அமைச்சரினால் பொதுவான அல்லது விஷேட விதிமுறைகளைப் பிறப்பிக்க முடியும்.

(5) மாகாணக் குழுவின் தனிப்பட்ட அதிகாரங்கள், நடவடிக்கைகள் போன்றவற்றைச் செயற்படுத்துகையில் தேவைக்கேற்றவாறு காலத்துக் காலம் வழிகாட்டுதல்களையும், அறிவுரைகளையும் அமைச்சரினால் வழங்க முடியும்.

(6) இக்கொள்கைப் பிரகடனத்தின் II ஆவது சரத்தின் கீழ் செயற்படுத்துவதற்காக யாதேனுமொரு உள்ளூராட்சி நிறுவனத்திற்கு கட்டளைகளை விதிப்பதற்கு விடயப் பொறுப்பான அமைச்சருக்கு அதிகாரம் உள்ளது.

சமூக நல அமைப்புகளை பறிமுதல் செய்தல்.

11. (1) மேலே 7 ஆவது சரத்தின் விதிமுறைகளின் பிரகாரம் பதிவு செய்யப்படாத அல்லது 8 ஆவது சரத்தின் பிரகாரம் வருடாந்த அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளாத அல்லது மேலே 10 (2) உப சரத்தின்கீழ் ஆய்வுப் பரிந்துரைகளின் அடிப்படையில் அமைச்சரினால் விதிக்கப்படும் சமூக நல அமைப்புக்களின் மூலம் வழிநடாத்தப்படுகின்ற அல்லது நிர்வகிக்கப்படுகின்ற மாகாணத்தினுள் அமைந்துள்ள நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதாரச் செயற்றிட்டங்களின் சகல சொத்துக்களும், பொறுப்புக்களும் அச்செயற்றிட்டம் செயற்படுத்தப்படுகின்ற பிரதேசம் உரித்துடைய உள்ளூராட்சிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட முடியும்.

(2) அவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட செயற்றிட்டமானது உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் குறிப்பிடப்படும் விதத்தில், பறிமுதல் செய்யப்பட்ட உள்ளூராட்சிமன்றத்தினால் வழிநடாத்தப்படவோ நிர்வகிக்கப்படவோ அல்லது செயலாளரினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு உட்பட்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்ட சமூகநல அமைப்பொன்றிற்கு வழங்க முடியும்.

## பகுதி III

## நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதாரம் தொடர்பான மாகாணக் குழுவொன்றினை நிறுவுதல், அதன் அமைப்பு மற்றும் நடவடிக்கைகள்

மாகாணக் குழு.

12. விடயப் பொறுப்பான அமைச்சரினால் நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதாரம் தொடர்பாக இதன் பின்னர் “மாகாணக் குழு” எனும் பெயரில் மாகாண குழுவொன்றை நிறுவ முடியும்.

மாகாணக் குழுவின் அமைப்பு.

13. மாகாணக் குழு கீழுள்ள உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் :-

(1) மாகாண சபையின் பிரதம செயலாளர் குழுவின் தலைவராவார்.
(2) கமிட்டியின் செயலாளர் வடமேல் மாகாண அலகின் பணிப்பாளராவார்.
(3) உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர்.
(4) கல்வி விடயப் பொறுப்புடைய வடமேல் மாகாண அமைச்சின் செயலளார்.
(5) பொறியியல் சேவை விடயத்திற்குப் பொறுப்பான வடமேல் மாகாண பிரதி பிரதான செயலாளர்.
(6) குருநாகல், புத்தளம் மாவட்ட செயலாளர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள்.

(7) தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வடமேல் மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொது முகாமையாளர்.

(8) வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் நாயகம்.

(9) வடமேல் மாகாண சபையின் சுகாதாரச் சேவைப் பணிப்பாளர்.

(10) வடமேல் மாகாண சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர்.

(11) வடமேல் மாகாண வீதித் திணைக்களம் மற்றும் பெருந்தெருக்கள் திணைக்களத்தின் பணிபப்பாளர்கள்.

(12) குடிநீர் வழங்கல், பொதுச் சுகாதார செயற்றிட்டங்களைச் செயற்படுத்தும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள்.

(13) குருநாகல், புத்தளம் மாவட்ட சமூக நல சங்கங்களின் மாவட்ட ஒன்றிய தலைவர்கள்.

(14) தற்போது நடைமுறையில் உள்ள அல்லது இதன் பின்னர் மாகாணத்தினுள் நிதி உதவியின் கீழ் செயற்படுத்தப்படவுள்ள நீர் வழங்கல், சுற்றாடற் பொது சுகாதார செயற்றிட்டமொன்றின் தலைவர்.

14. மாகாணக் குழுவின் பணிகள் கீழுள்ளவாறு அமையும் :- மாகாணக் குழுவின் பணிகள்.

(1) நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதாரத்திற்குரிய கொள்கைகள், வேலைத்திட்டங்களைத் திட்டமிடல்.

(2) மாகாணத்தினுள் நீர் வழங்கல், சுற்றாடற் பொது சுகாதாரத் தேவைகளைத் தீர்மானித்தல்.

(3) மாகாண அலகு முன்வைக்கும் அபிவிருத்தித் திட்டங்களை கலந்தாலோசித்தலின் பின்னர் அனுமதித்தல் அல்லது திருத்தங்களுடன் அனுமதித்தல் அல்லது பொருத்தமற்றது என தீர்மானிப்பின், நிராகரித்தல்.

(4) நடைமுறையில் உள்ள நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதாரச் செயற்திட்டங்களுக்கு வழிகாட்டல் மற்றும் பராமரிப்புச் செயற்பாடுகளைத் தீர்மானித்தல்.

(5) நீர் வழங்கல், பொதுச் சுகாதார நடவடிக்கைகளுடன் தொடர்பான செயற்றிட்ட முன்மொழிவுகளுக்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல் மற்றும் விதப்புரைகளை விடய பொறுப்பு அமைச்சருக்கு முன்வைத்தல்.

(6) நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதார நடவடிக்கைகள் தொடர்பில் அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் துறை உதவித் தொகுதிகளிலிருந்து உதவியைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

15. (1)மாகாணக் குழுவின் கீழ் இயங்கும் உறுப்பினர்கள் இரு மாதங்களுக்கு ஒரு முறை ஒன்று கூட வேண்டும். தேவையேற்படின் தலைவரின் அறிவுரையின் பேரில் செயலாளருக்கு மேலதிக கூட்டங்களை ஏற்பாடு செய்யலாம்.

(2) மாகாணக் குழுவின் ஒன்று கூடலின் போது குறைந்தது பத்து உறுப்பினர்களாவது பங்குபற்ற வேண்டும்.

## பகுதி IV

### நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதாரம் தொடர்பாக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவொன்றை ஆரம்பித்தல், அதன் அமைப்பு மற்றும் அதன் பணிகளும் அதிகாரங்களும்

16. நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதாரம் தொடர்பில் இதன் பின்னர் "பிரதேசக் குழு" எனும் பெயரில் அழைக்கப்படும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவொன்று உள்ளூராட்சிமன்ற அதிகாரப் பிரதேசத்தினுள் நிறுவப்பட வேண்டும். பிரதேசக் குழு.

17. உள்ளூராட்சிமன்ற அதிகாரப் பிரதேசத்தினுள் வசிக்கும் பொது மக்களின் சுகவாழ்விற்குத் தேவையான குடிநீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதாரச் செயற்றிட்டங்களின் நிலைப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கொள்கை ரீதியான மற்றும் நிர்வாகத் தீர்மானங்களை எடுப்பதற்கும் மாகாணக் குழுவின் நோக்கங்களைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும் பங்களித்தல் பிரதேசக் குழுவின் நோக்கமாகும். பிரதேசக் குழுவின் நோக்கம்.

18. பிரதேசக் குழு கீழுள்ள உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும் :- பிரதேசக் குழுவின் அமைப்பு.

(1) உள்ளூராட்சி மன்றத் தலைவர் பிரதேசக் குழுவின் தலைவராவார்.

(2) உரிய உள்ளூராட்சி மன்றத்தின் நீர் வழங்கல், பொதுச் சுகாதாரத்திற்குப் பொறுப்பான அதிகாரி பிரதேசக் குழுவின் செயலாளராவார்.

(3) பிரதேசத்தின் பிரதேச செயலாளர்கள் அல்லது அவரின் பிரதிநிதிகள்.

(4) உள்ளூராட்சி மன்றத்தின் செயலாளர்.

(5) பிரதேசத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர்.

(6) பிரதேசத்தின் பிரதேசச் சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அல்லது அவரது பிரதிநிதி.

(7) தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொது முகாமையாளரினால் பெயர் குறிப்பிடப்பட்ட அச்சபையின் உத்தியோகத்தர் ஒருவர்.

(8) சமூக நல அமைப்பின் பிரதேச அமைப்பின் தலைவரும் செயலாளரும்.

(9) கமநல சேவைப் பிரதேச அதிகாரி.

19. உள்ளூராட்சி மன்ற அதிகாரப் பிரதேசத்தினுள் :- பிரதேசக் குழுவின் பணிகள்.

(1) குடிநீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதாரத் தேவைகள், பிரச்சினைகளை இனங்கண்டு மாகாணக் குழுவிற்கு முன்வைத்தல்.

(2) நடைமுறையில் உள்ள நீர் மற்றும் சுற்றாடற் பொதுச் சுகாதாரச் செயற்திட்டங்களின் நடப்பு மற்றும் முன்னேற்றம் குறித்த மேற்பார்வை.

(3) சமூக நல அமைப்புக்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல், வழிநடாத்தல்.

(4) சமூக நல அமைப்புக்களிடையே உள்ளக ஒருங்கிணைப்பு.

(5) மாகாண அலகினால் செய்ய வேண்டும் என விதிக்கப்படும் நடவடிக்கைகளை நிறைவேற்றுதல்.

என்பன குழுவின் பணிகளாகும்.

பிரதேசக் குழுவின் அதிகாரங்கள்.

20. (1) மேலே 19 ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு பிரதேசக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

(2) மாகாணக் குழுவினால் அலகின் பணிப்பாளர் மூலம் விதிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அதிகாரமுண்டு.

(3) பிரதேசக் குழுவினால் அதன் தனிப்பட்ட அதிகாரங்களையும், பணிகளையும் செயற்படுத்துகையில் மாகாணக் குழுவினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படுகின்ற பொதுவான அல்லது விஷேட விதிமுறைகளையும், அறிவுரைகளையும் பின்பற்றிச் செயற்பட வேண்டும்.

பிரதேசக் குழுவின் ஒன்றுகூடல்.

21.(1) பிரதேசக் குழுவின் கீழ் இயங்குகின்ற ஊழியர்கள் இரு மாதத்திற்கு ஒரு தடவை ஒன்று கூட வேண்டும். அத்துடன் தேவையேற்படின், தலைவரின் பணிப்புரையின் பேரில் செயலாளர் மேலதிக ஒன்று கூடல்களை ஏற்பாடு செய்யலாம்.

(2) பிரதேசக் குழுவின் ஒன்று கூடலின்போது குறைந்தது உறுப்பினர் தொகையில் மூன்றில் ஒன்று கலந்து கொள்ள வேண்டும்.

(3) பிரதேசக் குழுவினால் அவ்வொன்று கூடல்களின் நடவடிக்கைகள், பணிகள் போன்றவற்றை முன்னெடுப்பதற்குத் தேவையான நிலையியற் கட்டளைகளை வகுத்துக் கொள்ளலாம்.

## பகுதி V

### பிரதேச நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதார அலகினை நிறுவுதல்

பிரதேச நீர் வழங்கல், பொதுச் சுகாதார அலகு.

22. இக்கொள்கைத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்படுகின்ற பிரதேசக் குழுவின் நோக்கம் மற்றும் நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளுவதற்குத் தேவையான பிரதேசக் குடிநீர், சுற்றாடற் பொதுச் சுகாதார அலகை (இதன் பின்னர் "பிரதேச அலகு" என அழைக்கப்படுகின்ற) மாகாணத்தினுள் அமைந்துள்ள உள்ளூராட்சி மன்ற அலுவலகத்தில் ஆரம்பிக்க முடியும்.

பிரதேச அலகின் ஊழியர் குழு.

23. 21 ஆவது சரத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட பிரதேச அலகில் கடமையாற்றுவதற்குத் தேவையான ஊழியர் குழுவினை பிரதேச உள்ளூராட்சி மன்றத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள ஏதாவதொரு பதவியை வகிக்கும் ஒருவருக்கும் வழங்குவதன் மூலம் பெற்றுக்கொள்ள கட்டளை பிறப்பித்து விதிமுறைகளை வகுக்க உள்ளூராட்சி ஆணையாளரினால் முடியும்.

பிரதேச அலகின் நிர்வாகம்.

24. பிரதேச அலகினால் நிகழ்த்தப்படும் சகல நடவடிக்கைகள் மற்றும் அதன் பணிகள் குறித்த நிர்வாகம் உள்ளூராட்சி ஆணையாளருக்கும், அலகின் முகாமையாளரின் வழிகாட்டலின் கீழ் உள்ளூராட்சி மன்றத் தலைவருக்கும் உரியது.

பிரதேச அலகின் சம்பளமும் கொடுப்பனவுகளும்.

25. 23 ஆவது சரத்தின் பிரகாரம் நிலையான பதவிக்கு மேலதிகமாக பிரதேச அலகில் கடமையாற்றும் அதிகாரி ஒருவருக்கு அவ்வாறு கடமை பொறுப்புச் சாட்டப்பட்டதன் பேரில் தமது நிலையான பதவிக்கு வழங்கப்படும் சம்பளம், கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக சம்பளமோ அல்லது கொடுப்பனவோ வழங்கலாம்.

## பகுதி VI

### நிதி ஒதுக்கீடு

நிதி ஒதுக்கீடு.

26. இக்கொள்கைப் பிரகடனத்தைச் செயற்படுத்தத் தேவையான நிதி ஒதுக்கீடு.-

(1) மாகாண சபையின் வருடாந்த வருமான செலவின அறிக்கை மற்றும் வரவு செலவு மதிப்பீட்டிலிருந்து,

(2) உள்ளூராட்சி மன்றங்களின் வருடாந்த வரவு செலவிலிருந்து,

(3) அரச சார்பற்ற அல்லது தனியார் அல்லது பிற நிதி மூலங்களிலிருந்து,

(4) செயற்திட்டத்திற்காக வழங்கும் நிதி ஒதுக்கீடுகள் மூலம்,

நிர்ணயித்து வழங்க முடியும்.

## பகுதி VII

### பொது விதிமுறைகள்

27. இக்கொள்கைப் பிரகடனத்தின் விதிமுறைகள், கொள்கைகள் என்பவற்றைச் செயற்படுத்துவதற்காக இங்கு 10 ஆவது சரத்தின் கீழ் அமைச்சரினால் விதிக்கப்படும் சகல கட்டளைகளும் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு பிரசுரிக்கப்படும் தினத்தில் அல்லது அக்கட்டளையில் குறிப்பிடப்படக்கூடிய தினத்தில் அது செயற்படுத்தப்பட வேண்டும். கட்டளைகளை வர்த்தமானியில் பிரசுரித்தல்.

28.(1) அமைச்சரினால் விதிக்கப்படும் அனைத்து கட்டளைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பின்னர் இயலுமான வரை விரைவாக மாகாண சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டளைகள் அவ்வாறு அனுமதிக்கப்பட்ட நாள் முதல் அமுலாகுவதாக கருதப்பட வேண்டும் என்பதுடன் அதன் கீழ் அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட எதற்கும் பாதிப்புகள் ஏற்படக்கூடாது. அமைச்சரினால் விதிக்கப்படும் கட்டளையொன்று அவ்வாறு அமுலாகுவதாக கருதப்படும் தினத்தை வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்க வேண்டும். கட்டளைகளுக்காக மாகாண சபை அனுமதியைப் பெற்றுக் கொள்ளல்.

(2) அமைச்சரினால் விதிக்கப்படும் யாதேனுமொரு கட்டளையொன்று மாகாண சபையினால் அனுமதிக்கப்படும் போது அது இக்கொள்கைப் பிரகடனத்தில் விதிக்கப்பட்டதாக கருதப்பட்டு அமுலாக வேண்டும். அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டமை தொடர்பான அறிக்கையை வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டும்.

29. இக்கொள்கைப் பிரகடனத்தில் அல்லது அதன் கீழ் தயாரிக்கப்பட்ட யாதேனுமொரு கட்டளையொன்றை அல்லது விதிமுறையொன்றை மீறும் அல்லது அதன் அடிப்படையில் செயற்படுவதை வேண்டுமென்றே புறக்கணிக்கும் அல்லது தடை செய்யும் நபர் இக்கொள்கைப் பிரகடனத்தின் கீழ் குற்றவாளியாக்கப்படுவார். குற்றம்.

30. இக்கொள்கைப் பிரகடனத்தின் கீழ் குற்றமொன்று இழைக்கப்படின் அது தொடர்பாக வழக்குத் தொடரும் அதிகாரம் அலகின் செயலாளருக்கு அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்படும் ஒருவருக்கு உள்ளது. வழக்குத் தொடரும் அதிகாரம்.

31. இக்கொள்கைப் பிரகடனத்தின் கீழ் தவறிழைக்கும் ஒவ்வொருவருக்கும் மாஜிஸ்ட்ரேட் ஒருவர் முன்னிலையில் நடாத்தப்படும் வழக்கு விசாரணை ஒன்றின் மூலம் குற்றவாளியாக்கப்பட்டால் ரூபா 5,000 இற்குக் குறையாத, ரூபா 20,000 இலும் அதிகரிக்காத தண்டப்பணம் அறவிடல் அல்லது 06 மாதங்களுக்கு குறையாத சிறைத்தண்டனைக்கு உட்படுத்தப்படல் ஆகிய இரு தண்டனைகளில் ஒன்றிற்கோ அல்லது இரண்டிற்குமோ உட்படுத்தப்படமுடியும். தண்டனை.

## பகுதி VIII

### கருத்து வெளிப்பாடு

32. இக்கொள்கைப் பிரகடனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள பதங்கள் தொடர்பில் மேலதிக விளக்கம் தேவைப்படின்,- பொருள்கோடல்.

(1) "மாகாணம்" என்பது வடமேல் மாகாணமாகும்.

(2) "ஆளுநர்" என்பது வடமேல் மாகாணத்தின் ஆளுநராவார்.

(3) "அமைச்சர்" எனும் பதத்தினால் வடமேல் மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சரும்.

(4) "பிரதம செயலாளர்" எனும் பதத்தினால் வடமேல் மாகாணத்தின் பிரதம செயலாளரும்,

(5) "செயலாளர்" எனும் பதத்தினால் உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரும்,

(6) "ஆணையாளர்" என்பதால் வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரும்,

(7) "தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை" எனும் பதத்தினால் 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையும்,

(8) "சமூக நல அமைப்பு" எனும் பதத்தினால் நீர் வழங்கல், சுற்றாடற் பொதுச் சுகாதார சேவை வழங்குதல் மற்றும் நிர்வாகத்திற்காக சேவை பெறுநர்களைப் பிரதி நிதியாகக் கொண்டு நிறுவப்பட்டுள்ள, உரிய சட்டத்தினால் அல்லது இக்கொள்கைப் பிரகடனத்தினால் பதிவு செய்யப்பட்டுள்ள அமைப்பும்,

(9) "சமூக நல பிரதேச ஒன்றியம்" எனும் பதத்தால் உள்ளூராட்சி நிர்வாக எல்லைக்குள் இயங்குகின்ற அனைத்து சமூக நல அமைப்புகளும் உள்ளடங்குமாறு அவ்வொன்றியங்களினால் கூட்டாக உருவாக்கப்பட்டுள்ள அமைப்பும்,

(10) "சமூக நல அமைப்பின் மாவட்ட ஒன்றியம்" என்பதனால் மாவட்டத்தினுள் அமைந்துள்ள சகல சமூக நல அமைப்புக்களும் பிரதேச அமைப்புக்களின் பங்களிப்புடன் அவ்வமைப்பினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள அமைப்பும்,

(11) "நீர் வழங்கல்" எனும் பதத்தினால் மாகாணத்தினுள் வசிக்கும் பொது மக்களுக்கு நீர் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு அரச, குறை அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் அல்லது நபர்களின் பங்களிப்பினால் அல்லது தலையீட்டினால், நிர்மாணிக்கப்படும், செயற்படுத்தப்படும், குடிநீர் செயற்திட்டங்களை இயக்குவதற்காக நிறுவப்படும் சமூக நல அமைப்புகளின் மூலம் பயன்பெறுபவர்களுக்கு, விலங்குகள் அல்லது வாகனங்களை விற்பனை செய்வதற்கு அல்லது குத்தகைக்கு விடுவதற்கு வைத்திருக்கும் போது அவற்றை கழுவுவதற்கான நீர் வழங்கல், யாதாயினும் ஒரு வியாபாரம், உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, நீர் விசிறி, நீச்சல் தடாகங்கள், நீர் விளையாட்டுகள், இயந்திர நடவடிக்கைகள் என்பவற்றுக்கு அல்லது நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்கான நீர் வழங்கல் அல்லாத நீர் வழங்கல்களும்,

(12) "சுற்றாடற் பொதுச் சுகாதாரம்" என்பதனால் நீர் வழங்கல், மலசலகூடம், கழிவு நீர் கொண்டு செல்லல் போன்றவற்றிற்காக அரச, குறை அரச, அரச சார்பற்ற நிறுவனங்களினால் அல்லது அவற்றின் தலையீட்டினால் நிர்மாணிக்கப்படும், செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களை நிர்வகித்தலும்,

(13) "மாகாண சபை" என்பதனால் வடமேல் மாகாணத்தின் மாகாண சபையும்,

(14) "மாகாண அலகு" என்பதனால் வடமேல் மாகாண குடிநீர், சுற்றாடற் பொதுச் சுகாதார அலகும்,

கருதப்படும்.

தெளிவின்மை ஏற்படுமிடத்து சிங்கள மொழி மூலமே செல்லுபடியாகும் என்பது.

33. இக்கொள்கைப் பிரகடனத்தில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கிடையில் ஏதேனும் பொருத்தப்பாடின்மை தோன்றுமாயின், சிங்கள மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளதே ஏற்றுக்கொள்ளப்படும்.

4-812

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.